**புத்திசந்திரன்**
உணவுத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

நாள் 30/07/2011

# பத்திரிக்கை செய்தி வெளியீடு

செ.வெ.எண் : 475

தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் படுகர் இன சமுதாயத்தினரை பழங்குடியினர் இன பட்டியலில் சேர்க்குமாறு வேண்டி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோரிக்கை படுகர் இன சமுதாயத்தினர் சார்பாக கோரிக்கை அளிக்கப் பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 26.07.2011 அன்று படுகர் இன சமுதாய தலைவர்களுடனான சந்திப்பின்போது அக் கோரிக்கையினை ஏற்று ஆவன செய்வதாக உறுதியளித்திருந்தார்கள்.

அதன்படி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு படுகர் இன சமுதாயத்தினரை பழங்குடியினர் இன பட்டியலில் சேர்க்குமாறு வேண்டி இன்று கடிதம் எழுதியுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த படுகர் இன சமுதாயத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றியினை பணிந்து தெரிவித்துக் கொள்கிறோம்.

பணிவுடன்

(புத்திசந்திரன்)
30/7/11

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை-9**